**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ம் நாள் புதன்கிழமை

**இ.ம.எண்.3/2025 அதன் அ.வ.எண்.163/2025**

முத்துக்குமார் ... மனுதாரர்/வாதி

–எதிர்–

மகாலெட்சுமி ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இம்மனு என்முன்பாக 11.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.ராமகிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஜோதி முருகன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

இம்மனுவானது, மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் பதில் உரையை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக் கோரி, மனுதாரரால் கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.ன் பிரகாரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

2.1) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், அசல் வழக்கானது மனுதாரர்/வாதியால், 23.01.2015 தேதியிட்ட ஆவண எண்.292/2015 ஆன செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் மற்றும் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் உண்மைக்கு மாறான பல சங்கதிகளை தெரிவித்துள்ளார் என்றும், அதனால் மேற்படி எதிர்வழக்குரையை மறுத்து பதில் உரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், மேற்படி மனுவை அனுமதிக்காத பட்சத்தில் மனுதாரருக்கு கஷ்ட, நஷ்டம் ஏற்படக் கூடும் எனக்கூறி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

**3) எதிருரை சுருக்கம்—**

வாதி தரப்பில் வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், வாதி வேண்டுமென்றே பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு பதிலுரை என்று ஒரு பொய்யான மனுவை வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) **இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பதில்உரையை ஏற்றுக் கொண்டு அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.**

5) இந்த மனுவை பொறுத்தவரை இருதரப்பிலும், வாய்மொழி சாட்சியத்தையோ அல்லது சான்றாவணத்தையோ முன்னிடப்படவில்லை.

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7) இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் வாதி ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது விளம்புகை மற்றும் பிராது தபசில் சொத்தைப் பொறுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார்.

8). மனுதாரர் தரப்பில், எதிர்மனுதாரர் / பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை மறுத்து மனுதாரர் தரப்பில் பதில் வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியது அவசியமானது என்றும், எனவே, மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதில் உரையை ஏற்றக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

9) மேலே கூறியுள்ள சங்கதிகளை பரிசீலனை செய்கையில், இந்த வழக்கானது சாட்சிகள் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/வாதியால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்மனுதாரர் தரப்பில் பதில் உரையை ஏற்றுக் கொள்ளக் கூடாது என வாதிட்ட போதிலும், இந்த வழக்கின் விசாரணை ஆரம்பிக்கவில்லை என்பதாலும், இந்த பதில் உரையை அனுமதிக்காது போனால் புதிய வழக்கு மூலம் எழுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை கருத்தில் கொண்டும், இந்த பதில் உரையை ஏற்றுக் கொள்வதால் எதிர்மனுதாரருக்கு பாதிப்பு எதுவும் ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதாலும், நீதியின் நலனை கருத்தில் கொண்டும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்திக் கொண்டும் இம்மனுவினை அனுமதித்து உத்தரவிடலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள பதில் உரையை ஏற்றக் கொள்ள அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.**

என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் நாளாகிய இன்று என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/R.M.மாரிமுத்து
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை
<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் </u>- இல்லை

ஒப்பம்/R.M.மாரிமுத்து
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

முதன்மை மாவட்ட உரிமையியல்
நீதிமன்றம், திருநெல்வேலி
**<u>இ.ம.எண்.3/2025 அதன்</u>**
**<u>அ.வ.எண்.163/2025</u>**
சீரான/ வரைவு உத்தரவு – **<u>26.11.2025.</u>**